**கவனிக்க.**– 2007.08.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1513 – 2007 අගෝස්තු 31 වැනි සිකුරාදා – 2007.08.31

1513 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 752 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 754 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, செத்தெம்பர் 07 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஓகத்து 24 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:–

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நிதி, திட்டமிடல் அமைச்சு

## விலை மதிப்பீட்டுத் திணைக்களம்

## இலங்கை விலை மதிப்பீட்டாளர் சேவையின் வகுப்பு III தரம் II இன் உதவி மாவட்ட விலைமதிப்பீட்டாளர் பதவி

விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவையின் வகுப்பு III தரம் II இன், உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கான பதவி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலில் தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, "செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு, செயலகம், கொழும்பு 1" என்ற விலாசத்திற்கு 17.09.2007 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் வகுப்பு III தரம் II பதவிக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்படல் வேண்டும்.

**குறிப்பு** :- (i) விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாவிடில் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவம் தபாலில் காணாமல் போய் விட்டதாகவோ அல்லது தாமதமாகிப் போய்விட்ட தென்ற குற்றச்சாட்டுக்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பப்படிவங்களை கடைசித் தினத்திற்கு முந்திய சில நாட்கள் வரை தாமதப்படுத்தி வைத்திருந்து அனுப்புவது அது அவர்களின் சொந்தப் பொறுப்பில் செய்தமையாகக் கருதப்படும்.

2. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமான தாகும். தெரிவு செய்யப்படுபவர் விதவைகள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செலுத்தப்பட வேண்டும். இந்த நியமனம் மூன்றாண்டு காலத்திற்கு தகுதிகாண் நிலையில் உள்ளதாகும்;

(ii) வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் பகுதி I தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்திலுள்ள அரச சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் ;

(iii) அரசாங்க மொழிக் கொள்கைக்கேற்பவும் பொதுநிர்வாக அமைச்சின் சுற்றுநிரூபம் இலக்கம் 7/2007 க்கு இணங்கவும் குறிப்பிட்ட கால தவணைக்குள் மொழித்திறமை பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. **சம்பளங்களும் படிகளும்**.- இப்பதவிக்கு இணைக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டம் கீழ்வருமாறு :-

ரூ. 15,785 - 18 x 290 - ரூபா 21,005 (பொது நிர்வாக சுற்றுநிரூபம் இல. 6/2006 க்கு அமைவாக MN 5-2006)

வினைத்திறன் காண் தடைப்பரீட்சை ரூபா 16,365 க்கும் ரூபா 17,525க்கும் முன்னர்.

4. **தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கீழக்காணும் தகைமைகளை திருப்திகரமாகப் பூர்த்தி செய்யக்கூடியவாராக இருக்க வேண்டும் :-

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
(ii) சிறந்த நற்குணமும் நல்ல கண் பார்வையும் உடல் நலமும் உள்ளவராக இருக்க வேண்டும் ;
(iii) 2007.09.17 அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (தாபன விதிக்கோவை பிரமாணங்களின்கீழ் அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).
(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட பெருந்தோட்ட முகாமையும் விலைமதிப்பீட்டும் விஞ்ஞான மாணிப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

5. **தேர்ந்தெடுக்கும் முறை**.- இந்த அறிவித்தலின் பிரகாரம் தகுதி பெறும் விண்ணப்பதாரிகள் ஒரு திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். இப்பரீட்சையில் சித்தி பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கை விலைமதிப்புச் சேவை பிரமாணக்குறிப்பின் பகுதி 5.4 இன் கீழ் நியமனம் செய்யப்பட்ட ஒரு தேர்வு சபையினால் நியமனக் கடிதம் பெற முன்னர் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

திறந்த போட்டிப் பரீட்சையின் பாடவிதானம் இது இரு பத்திரங்களை உள்ளடக்கியதாக அமையும் :-

*பத்திரம் - I*

வினாப்பத்திரம் 25 ற்கு மேற்படாத பல தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். பொதுவாக அவை பெருந்தோட்ட முகாமையும் விலைமதிப்பீட்டு விஞ்ஞானமாணி பாடவிதானம் சம்பந்தமானதாக இருக்கும்.

*நேரம் : 30 நிமிடங்கள்*

*சித்தியடையத் தேவையான புள்ளிகள் : 50%*

*பத்திரம் - II*

வினாப்பத்திரம் பொதுவாக பெருந்தோட்ட முகாமையும் விலைமதிப்பீட்டும் விஞ்ஞானமாணி பாடவிதானம் சம்பந்தமான வினாக்களைக் கொண்டிருக்கும்.

*நேரம் : 45 நிமிடம் முதல் 1 மணித்தியாலம் வரை*

*சித்தியடையத் தேவையான புள்ளிகள் : 50%*

6. விண்ணப்பதாரிகள் அழைக்கப்படும் பொழுது கீழ்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படலாம் :-

(i) பிறப்புச் சான்றிதழ் (**குறிப்பு**.- உதவி பெறும் பாடசாலை களின் ஒழுங்குத் திட்டத்தின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட பிறப்பு தொடர்பான ஞானஸ்தான சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.) ;

(ii) பட்டப்படிப்பு தொடர்பான, உயர்கல்வி தொடர்பான, தொழில்நுட்பக் கல்வி தொடர்பான சான்றிதழ்கள் ;

(iii) குணாதிசயம் தொடர்பான இரண்டு சான்றிதழ்கள் இவற்றில் ஒன்று இயக்குநர் கல்லூரி போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும் ;

(iv) சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பவற்றில் ஆகக்கூடிய பரீட்சையில் சித்தியெய்தியது தொடர்பான சான்றிதழ்.

**குறிப்பு** :-(i) இந்த விண்ணப்பப்படிவத்துடன் எந்தவிதமான ஆவணங்களோ அல்லது ஆவணங்களின் பிரதிகளோ இணைக்கக்கூடாது.

(ii)விண்ணப்பதாரிகள் கேட்கப்படும் பொழுது ஆவணங்களை சமர்ப்பிக்க தவறுமிடத்து அவர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.

7. அரச சேவை/மாகாண/கூட்டுத்தாபன சேவையில் உள்ளவர்களது விண்ணப்பங்கள் அவர்களின் தலைவர்களின் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் அவை தொடர்பான எவ்வித தொடர்புகளும் "செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு, செயலகம், கொழும்பு 1" என்ற விலாசமிடப்பட்டு இருக்க வேண்டும். அத்துடன் இவை தெடர்பாக எந்த அலுவலர்களுடனும் தனிப்பட்ட ரீதியில் தொடர்பு கொள்ளக்கூடாது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கிணங்க,

செயலாளர்,
நிதி திட்டமிடல் அமைச்சு.

நிதி திட்டமிடல் அமைச்சு.
செயலகம்,
கொழும்பு 1.
2007.08.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விலை மதிப்பீட்டுத் திணைக்களம்**

இலங்கை விலை மதிப்பீட்டாளர் சேவையின் வகுப்பு III தரம் II இன் உதவி மாவட்ட விலைமதிப்பீட்டாளர் பதவி

**கவனிக்க:-** விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் வகுப்பு III தரம் II உதவி மாவட்ட விலைமதிப்பீட்டாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் "செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு, செயலகம், கொழும்பு 1" இற்கு அனுப்பப்படல் வேண்டும்.

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :----.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
3. தபால் விலாசம் :-
   (அ) தனிப்பட்ட விலாசம் :----.
   (ஆ) அலுவலக விலாசம் :----.
   (விலாச மாற்றம் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்.)
4. பிறந்த திகதி :-
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
   விண்ணப்பப்படிவம் முடிவடையும் திகதியன்று வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. தேசிய இனம் :-----.
   (நீர் இலங்கையர் என்பது பிறப்புரிமையினாலா அல்லது பதிவினாலா என்று கூறவும்)
   பதிவு பிரசையெனில், விபரங்கள் தரவும் :-
6. (அ) பால் :----.
   (ஆ) சிவில் அந்தஸ்து:----.
7. பின்வரும் பாடங்களில் தோற்றிய ஆகக்கூடிய பரீட்சை :-
   (i) சிங்களம் :----.
   (ii) தமிழ் :----.
   (iii) ஆங்கிலம் :----.
8. கல்வி/தொழில்சார் தகைமைகள் :-

| தேர்வு /பட்டம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| | | |

9. தற்போதைய தொழில் அல்லது முன்னர் ஏதேனும் உத்தியோகத்தில் இருந்திருந்தால் :-

| பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|
| | | | |

10. மேலதிக விபரங்கள் ஏதுமிருப்பின்:----.
11. நீங்கள் அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளீரா? (அவ்வாறாயின் விபரங்கள் தருக.) :----.
12. உங்களுக்கெதிராக எப்பொழுதாவது ஒழுக்காற்று விசாரணை இருக்கிறதா ? (நீர் ஏற்கனவே அரச சேவையில் இருந்திருந்தால்) :----.
13. உங்களுக்கெதிராக எப்போதாவது நீதிமன்றம் ஒன்றில் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதா?
14. விண்ணப்பதாரருக்கு உறவு முறை இல்லாத இரு மத்தியஸ்த்தர்களின் பெயர்களும் பெறுபவர்களின் விலாசங்களும் தருக.
    I. :----.
    II. :----.
15. வேறு ஏதாவது தொடர்புடைய தகவல்கள் :----.
16. இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமையற்றவனாவேன் என்பதையும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரி அரசாங்க சேவையில்/ மாகாண சேவையில் / கூட்டுத்தாபன சேவையில் இருப்பவரெனின் நிறுவனத் தலைவரின் அறிக்கை**

----------------,
அமைச்சு/திணைக்கள/மாகாண சபை/கூட்டுத்தாபன தலைவரின் கையொப்பமும் பதவிப் பெயரும்.

திகதி :----.
8-933

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நிதி, திட்டமிடல் அமைச்சு

*இலங்கை திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆந் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை-2007*

இலங்கை திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும். இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2007, ஒற்றோபர் 01 ஆந் திகதி எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சைத் திட்டம்**.- கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அமைந்திருக்கும் :

(i) *திட்டமிடற் கோட்பாடுகள், முறையியல், நிறுவனங்கள், நிதி மற்றும் நிர்வாகம்* (நேரம் : 3 மணி) - 100 புள்ளிகள் (பாட இல. 1) ;

(ii) *பொருளாதாரப் பகுப்பாய்வும் புள்ளவிபரவியலும்* (நேரம் : 3 மணி) - 100 புள்ளிகள் (பாட இல. 2) ;

(iii) *கருத்திட்டத் திட்டமிடல்* (நேரம் : 3 மணி) - 100 புள்ளிகள் (பாட இல. 3) ;

(iv) *ஆங்கில மொழி* (நேரம் : 3 மணி) - 100 புள்ளிகள் (பாட இல. 4)

**குறிப்பு**.- (அ) ஒரு அலுவலர் தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் சகல வினாத்தாள்களுக்கும் தோற்ற முடியும்.

(ஆ) ஒருபரீட்சார்த்தி சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ பெற்றிருக்க வேண்டும்.

3. **பாடங்கள்**.- (i) *திட்டமிடற்கோட்பாடுகள், முறையியல், நிறுவனங்கள், நிதி மற்றும் நிர்வாகம் :*

முதலாம் பகுதி :

(அ) தேசிய இலக்குகளும் முன்னுரிமை விடயங்களும் அவற்றை எய்துவதற்கான கொள்கை அமைப்பும் நிகழ்ச்சித் திட்டங்களும்.

(ஆ) தேசிய திட்டமிடலுக்கான முறையியல், திட்டமிடலில் உள்ள பாரிய பிரச்சினைகள், பொதுமக்கள் பங்களிப்பு, மூலவளங்களைத் திரட்டுதலும் அவற்றின் ஒதுக்கீடும், அரசுசாரா நிறுவனங்களின் பங்கு.

(இ) தேசிய திட்டமிடலின் தன்மையும் தரவுகளின் மூலவளம், அவற்றைச் சேகரித்தல், முறைப்படுத்தல், சமர்ப்பித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், வெளிக்கள மதிப்பீடுகள், புலனாய்வுகள், குடிநிலைப் புள்ளியியல் கருத்துக்கள், பொருளாதார நோக்குகளும் கொள்கைப் பகுப்பாய்வும்.

இரண்டாம் பகுதி:

(அ) அரசாங்க நிதிப் பிரமாணங்கள் - I ஆவது தொகுதி (X ஆவது அத்தியாயம் தவிர்ந்ததாக)

(ஆ) நடப்பு வருட மதிப்பீடுகள் : உதாரணம் :- அவற்றை வரவு செலவுத் தலைப்புகளின் கீழும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் தயாரித்தல், நிதிசார் முறைமைகளின் ஒதுக்கீட்டுச் சட்டங்களும் குறைநிரப்பு மதிப்பீடுகளும்.

(இ) அலுவலக மற்றும் வெளிக்கள ஒழுங்கமைப்பும் முறைமைகளும்.

(ஈ) தாபனக் கோவையின் I, II, III, IV, V, VI, VII, IX, XI, XII, XV, XXII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

(ii) *பொருளாதாரப் பகுப்பாய்வும் புள்ளிவிபரவியலும் :*

(அ) உற்பத்தி மற்றும் விநியோகக் கொள்கைகளுக்குக் குறிப்பாகக் கவனம் செலுத்தி பொருளியல் விஞ்ஞானக் கோட்பாடுகள்.

(ஆ) பணம், வங்கி, சர்வதேச நிதி முறைமை மற்றும் வியாபாரம்.

(இ) அரச நிதி, பணம், வியாபாரம் மற்றும் தீர்வைக் கொள்கைகள் மற்றும் ஏனைய கொள்கைகள்.

(ஈ) இலங்கையின் பொருளாதார கட்டமைப்பு.

(உ) பொருளாதார மீளாய்வு.

(ஊ) தொழில்நுட்ப ரீதியாகத் தொழில் திறன்பெற்ற மற்றும் பெறாத மனிதவளம் மற்றும் வெளிநாட்டு உதவியும் ஆதரவும் உட்பட ஏனைய மூலவளங்கள், மதிப்பீடு மற்றும் அவற்றின் பயன்பாடு.

(எ) பொருளாதார, விஞ்ஞான மற்றும் சமூக எதிர்வுகூறல்கள்.

(ஏ) பொருளாதாரப் பகுப்பாய்விலும் திட்டமிடலிலும் பயன்படுத்தப்படும் அடிப்படை புள்ளிவிபர எண்ணக்கருக்களும் நுணுக்கங்களும்.

(ஐ) இலாபம்/செலவினங்கள் பகுப்பாய்வுக் கோட்பாடுகள்.

(iii) *கருத்திட்டத் திட்டமிடல் :*

(அ) திட்டமிடல் - கருத்திட்டங்களைக் கண்டறிதலும். வரையறுத்தலும், கருத்திட்ட உருவாக்க நெறிகள், இடவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான கட்டளைகளும் தேர்ச்சியும் ஆகுசெலவையும் இலாபங்களையும் மதிப்பீடு செய்தல், தொழில்நுட்ப, நிதிசார் மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வு.

(ஆ) கருத்திட்டங்களை அமுலாக்கல் - கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் முறையாகவும் நேரமறிந்தும் அமுலாக்கல் - விரிவான வேலைத் திட்டங்களையும்

அமுலாக்கல் அட்டவணைகளையும் தயாரித்தல் - கணிப்பும் முன்னேற்றக் கட்டுப்பாட்டு வரைபடங்களும் ஒன்றிணைப்பும் தொடர்ந்து செயற்படுத்தலும்.

(iv) *ஆங்கில மொழி*.- இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்கள் தங்களது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான ஆங்கில அறிவைப் பரிசோதிக்கும் விதத்தில் இந்த வினாத்தாள் அமைந்திருக்கும்.

4. இவ்வறிவித்தலின் இறுதியில் இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள், தங்கள் சொந்த விண்ணப்பப்படிவங்களைக் கண்டிப்பாக இம்மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் போன்று தயாரிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். விண்ணப்பப்படிவங்கள் ஒரு A4 அளவு தாளில் (வேறு அளவினதான தாளிலன்று) பரீட்சார்த்தியினால் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் ஒன்றிலிருந்து ஏழு வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும் மிகுதி விபரங்கள் அடுத்த பக்கத்திலுமாக ஒரு தாளின் இருபக்கத்திலும் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர்களூடாக (பிரதேச செயலாளர் அலுவலகம் எனின், பிரதேச செயலாளர் ஊடாக) "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 2007, ஒற்றோபர் 01 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பம் வைக்கப்பட்டுள்ள காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் அல்லது பூர்த்தி செய்யப்படாத எந்தவொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

அரச கருமமொழிக் கொள்கை தொடர்பாக புதிதாகச் சேர்ந்த அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவத்தினை அரச கரும மொழி அல்லது தாம் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட மொழிமூலத்திற்கமைய, தமிழ் மொழியில்/ஆங்கில மொழியில் தயாரித்துச் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவத்தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியும், தமிழ் மொழி விண்ணப்பப்பத்திரத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடவும்.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அத்தோடு பரீட்சை நடைபெறும் திகதி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்றும் பிரசுரிக்கப்படும். பரீட்சைத் திகதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையைப் பெறாவிடின், அவர்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், நிறுவனங்கள்/வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு உடன் காலதாமதமின்றி தொடர்பு கொள்ளுதல் வேண்டும். (தந்தி முகவரி "எக்ஸாம்ஸ்" பத்தரமுல்ல) அவ்வாறு தொடர்புகொள்ளும்போது பின்வரும் தகவல்களையும் அறிவித்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) முழு அஞ்சல் முகவரி ;
(iv) விண்ணப்பம் அனுப்பிய அஞ்சல் அலுவலகமும், பதிவிலக்கமும் திகதியும் ;

6. **ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டபப்பொறுப்பாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியன ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்).

மேற்கூறியவைகளில் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் பரீட்சார்த்தி நிலை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் நிராகரிக்கப்படுவதற்கு அதிகாரம் கொண்டிருப்பார்.

10. பரீட்சைக் கட்டணங்கள்.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் அடிப்படையில் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது :

| | பரீட்சைக் கட்டணம் ரூ. ச. |
|---|---|
| (அ) முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கட்டணம் அறவிடப்படமாட்டாது | .......... |
| (ஆ) அதன் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப் பரீட்சைக்கு | 115.00 |
| (இ) ஒரு பாடத்திற்கு | 75.00 |
| (ஈ) இரு பாடங்களுக்கு | 150.00 |
| (உ) மூன்று பாடங்களுக்கு | 225.00 |

பரீட்சைக் கட்டணங்கள் அரசிறை முத்திரைகளாகச் செலுத்தப்பட்டு அவற்றின்மீது பரீட்சார்த்தி கையொப்பமிட்டு அவற்றைப் பெறுமதி நீக்கம் செய்தல் வேண்டும்.

9. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்பெறும். பரீட்சார்த்திகள் பரீட்சை நடத்துவதற்காகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்பட்ட விதிகளுக்கும் கட்டுப்பட்டவராவார்கள். இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் இந்தப் பரீட்சைக்கும் செல்லுபடியாகும்.

10. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதிபெற்றவர், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவர்களுக்குமான, தங்கள் திணைக்கள/நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்குப் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குத் திணைக்கள/நிறுவனத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படல் வேண்டும்.

11. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இலங்கைத் திட்டமிடல் சேவைச் சபையின் தற்றுணிபின்படி முடிவு செய்யப்படும்.

யூ. ஜீ. கே. சமரசேகர
பணிப்பாளர் நாயகம்,
நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2007.08.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிதி, திட்டமிடல் அமைச்சு**

இலங்கைத் திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2007

FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN CLASS II GRADE II OF THE SRI LANKA PLANNING SERVICE - 2007

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.)

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
   (உதாரணம் : MR./MRS./MISS. SILVA, B. A.)
   1.2 முழுப் பெயர் :----.
   (சிங்களத்தில்/ தமிழில்)
   1.3 தேசிய அடையாள அட்டை இல. :

2. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----
   2.1 அலுவலக முகவரி :----.
   (சிங்களத்தில்/ தமிழில்)
   2.2 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :----.
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3. பால் :
   3.1 ஆண் - 1
   பெண் - 0
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

   3.2 பிறந்த திகதி :

   ஆண்டு : மாதம் : திகதி :

   3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வயது :

   வருடங்கள்: மாதங்கள் : நாட்கள் :

4. இலங்கை திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆந் தரத்தில் உள்வாங்கிய திகதி :----.
(கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக)

5. அரச கரும மொழிக் கொள்கையின் பொருட்டு நீங்கள் முன்னர் சேர்ந்தவரா அல்லது புதிதாகச் சேர்ந்தவரா ? :----.

6. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகமாக இருந்தால் அந்த அலுவலகத்தின் பெயர்) :----.

7. வர்த்தமானியின் 2 ஆவது பந்தியின் கீழ் நீங்கள் விண்ணப்பித்த பாடங்கள் :----.

| பாடங்கள் | பாட இல. |
|---|---|
| திட்டமிடல் கோட்பாடு முறைமையியல், தாபனம், நிதி நிர்வாகம் | |
| பொருளியல் பகுப்பாய்வும் புள்ளிவிபரவியலும் | |
| கருத்திட்ட திட்டமிடல் | |
| ஆங்கில மொழி | |

8. நீங்கள் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றுகிறீர்களா ? :----.

9. நீங்கள் பரீட்சைக்குத் முதல் தடவையாக இல்லாதுவிடில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

முழுப் பரீட்சைக்காக ரூபா 115 ஆகும். ஒவ்வொரு பாடத்திற்கெனின், ரூ. 75 வீதம் பெறுமதிக்கேற்ப முத்திரையை இக்கூட்டில் ஒட்டி கையொப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும்.

10. விண்ணபத்தில் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடியானவை என்றும், பெறுமதி நீக்கப்பட முன்னர் உபயோகிக்கப்படவில்லை என்றும், நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேற்குறிப்பிடப்பட்ட மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவன் என்றும் நான் உறுதிமொழி கூறுகின்றேன்.

.........................................,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிட அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் அலுவலர் அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

திரு./ திருமதி/ செல்வி ......................................................... .......................... எனது அலுவலகத்தில் ஓர் அலுவலர் என்றும் அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் 2007 ஆம் ஆண்டு ............... மாதம் ............. ஆந் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

--------------------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.

பதவிப்பெயர் :----.

முகவரி :----.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

நான்,

(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும்,

(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும்

சான்றுப்படுத்துகின்றேன்.

.........................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

பதவிப் பெயர் :----.
திகதி :----.

8-1110

---

## நிதி, திட்டமிடல் அமைச்சு

### இலங்கை திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை-2007

இலங்கை திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளரினால் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். கீழ்க்காணும் அறிவித்தலுக்கமைய இருபாலாரிடமிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **அவசியமான தகைமைகள்**.- கீழ்க்காணும் சேவைகளின் முன்னால் தரப்பட்டுள்ள சம்பள அளவுகளில் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களுக்கு மட்டும் இதற்காக விண்ணப்பிக்க முடியும் :

**சம்பள அளவுத்திட்டம்** :

(i) *திட்டச் செயற்படுத்துகை உத்தியோகத்தர் (எம்என் 5) :*

ரூ. 15,785 - 10 x 290 - 15 x 325 - 11 x 400 - ரூ. 27,960

(ii) *அபிவிருத்தி உத்தியோகத்தர் (எம்என் 4) :*

ரூ. 14,850 - 10 x 185 - 4 x 210 - 15 x 290 - 7 x 320 - ரூ. 24,130

(iii) *புள்ளிவிபர உதவியாளர் (எம்என் 4) :*

(நிதி, தேசிய திட்டமிடல் பொறுப்பு அமைச்சு)

ரூ. 14,850 - 10 x 185 - 4 x 210 - 15 x 290 - 7 x 320 - ரூ. 24,130

(iv) *தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் (எம்என் 5) :*

(இளைஞர் விவகார, விளையாட்டு அமைச்சு)

ரூ. 15,785 - 10 x 290 - 15 x 325 - 11 x 400 - ரூ. 27,960

(v) *கருத்திட்ட உத்தியோகத்தர்* (தி. செ. மற்றும் பா. வி. அமைச்சு) (எம்என் 5)

ரூ. 15,785 - 10 x 290 - 15 x 325 - 11 x 400 - ரூ. 27,960

(vi) *அபிவிருத்தி உதவியாளர்* (தி. செ. மற்றும் பா. வி. அமைச்சு) (எம்என் 4)

ரூ. 14,850 - 10 x 185 - 4 x 210 - 15 x 290 - 7 x 320 - ரூ. 24,130

(vii) மேற்கூறிய பதவிகளுக்குச் சமனான திட்டமிடல் விடயங்களில் பதவி வகிக்கும் 5 வருட தொடர்ந்தேர்ச்சியான சேவைக் காலமொன்றினைக் கொண்டுள்ளதுடன் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பட்டதாரிகள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தகைமைகளை உடையவராக இருப்பதுடன், அதற்கு ஆதரவாக திருப்திகரமான ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ஆ) மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான நியமனம் நிரந்தரமாக்கப் பட்டிருத்தல் ;

(இ) அப்பதவியொன்றில் 5 வருட காலத்துக்குக் குறையாத தொடர்ச்சியான நிரந்தர சேவைக்காலம் இருத்தல் ;

(ஈ) தேவைப்படும்போது கீழ்க்காணும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க பரீட்சார்த்தி தயாராக இருத்தல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பட்டம் அல்லது பட்டப்பின் படிப்புச் சான்றிதழ் ; (தகுதிகள் பெறப்பட்ட சான்றிதழ்)

(இ) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள் (அண்மையில் பெறப்பட்டது) ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் சித்தியெய்திய ஆகக் கூடிய பரீட்சையின் சான்றிதழ் ;

**குறிப்பு**.- பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு தவிர வேறு எந்தவொரு ஆவணங்களோ அல்லது பிரதிகளோ விண்ணப்பத்துடன் இணைக்கக்கூடாது.

3. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.- திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் வெற்றிடங்களில் 25 வீதத்திற்கு மேற்படாத எண்ணிக்கையான வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் மீது சபையினால் நியமனம் வழங்கப்படும்.

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உண்டு. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நியமனம் ஒரு வருட கால பதிற் கடமையாற்றல்/பரீட்சார்த்த காலத்துக்கு உட்படுத்தப்படும்.

(iii) சேவை நிரந்தரமாக்கப்பட முன்னர் திட்டமிடற் சேவையினைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களும், முதலாவது வினைத்திறமைகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். இவ்வினைத் திறமைகாண் பரீட்சை, கீழ்க்காணும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(அ) திட்டமிடல் எண்ணக்கருக்கள் முறையியல், திட்டமிடல் நிறுவனங்கள், நிதி மற்றும் நிர்வாகம் ;

(ஆ) பொருளாதார பகுப்பாய்வும், புள்ளிவிபரங்களும் ;
(இ) செயற்திட்டங்களைத் திட்டமிடல் ;
(ஈ) *ஆங்கில மொழி.- (இதுபற்றிய முழு விபரங்களும் 2000.05.30 ஆந் திகதிய 1134/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை திட்டமிடற் சேவை பிரமாணத்தின் 'இ' பிரிவில் தரப்பட்டுள்ளன.)*

4. வருடாந்த சம்பள அளவுத் திட்டமும் மாதாந்த சம்பள அமைப்பும்: (பொ. நி. சுற்றறிக்கை இல. 6/2006 இன்படி)-

*மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.-* ரூ. 22,935-10X695-8X790-17X1,050- ரூ. 53,555 (மாதாந்த சம்பளம் ரூ. 24,225 இற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைக் காண் பரீட்சையும் ரூ. 28,095 இற்கு முன்னர் இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சையும் நடைபெறும்.) :-

*வகுப்பு I இல் ஆரம்பச் சம்பளம்* : ரூ. 36,755
*வகுப்பு II இல் ஆரம்பச் சம்பளம் (இ. தி. சே. வகுப்பு II தரம் I)*: ரூ. 30,175
*வகுப்பு III இல் ஆரம்பச் சம்பளம் (இ. தி. சே. வகுப்பு II தரம் II)*: ரூ. 22,935

5. **விண்ணப்பங்களும் பரீட்சைக் கட்டணங்களும்.**- (அ) இந்தப் பரீட்சைக்கான கட்டணம் ரூ. 300 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் தினத்திற்கு முன்னர் அரசிறைத் தலைப்பு 4000-20-03-20-13 இற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் மாவட்டச் செயலாளர் அலுவலகம் அல்லது பிரதேசச் செயலாளர் அலுவலகத்திற்கு பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பத்தின் இரண்டாம் பக்கத்தின் மேற்பகுதியில் ஒட்டப்படுதல் வேண்டும். (இப்பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது) உரிய தினத்திற்குப் பின்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். பணம் செலுத்திப் பெற்றுக்கொள் ளப்படும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்.

(ஆ) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப் படுவதோடு, பரீட்சை ஆணையாளரினால் பரீட்சைக்கான திகதியை அறிவிப்பதற்கான பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். பரீட்சைக்குரிய தினத்திற்கு 07 நாட்களுக்கு முன்னர் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு கீழ்க்காணும் விபரங்களுடன் அறிவித்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பம் தபாலில் அனுப்பப்பட்ட திகதியும் தபால் அலுவலகமும், பதிவு இலக்கமும் ;
(v) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட திகதி, இடம், பற்றுச்சீட்டு இலக்கம்.

6. **பரீட்சைக்கான அனுமதி**.- (அ) எந்தவொரு பரீட்சார்த்தியும் இந்தப் பரீட்சைக்கு 03 தடவைகள் மாத்திரமே தோற்ற அனுமதிக்கப் படுவார்.

(ஆ) தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திப் பரீட்சை மண்டபத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சைக்கு சமுகமளிப்பதற்காக பிரயாணச் செலவினத் திற்கோ அல்லது வேறு எந்தவித கொடுப்பனவுகளுக்கோ பரீட்சார்த்தி உரிமையுடையவராகமாட்டார்.

**குறிப்பு.**- பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றவென பரீட்சை ஆணையாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படுவதனால் அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பெற்றுள்ளார் எனக் கருத முடியாது.

7. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலின் இறுதியிற் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய 21X29 செ. மீ. (A4) அளவிலான முழுக் கடதாசியின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட வேண்டும். 01 இலிருந்து 08 வரையிலான பகுதிகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் வரக்கூடியதாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுவது அவசியமாகும்.

(ஆ) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் "பரீட்சை ஆணையாளர், பெலவத்தை, பத்தரமுல்லை" என முகவரியிடப்பட்டு 2007, ஒற்றோபர் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "திட்டமிடல் சேவையில் ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(இ) அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை அவர்களது திணைக்களங்களின் தலைவர்களூடாகவும், அரச கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சிச் சபைளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை அவர்களது நிறுவனங்களின் தலைவர்களூடாக வும் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் அனுப்பப்படுவது அவசியமாகும்.

(ஈ) விண்ணப்பதாரர் எந்த மொழியில் பரீட்சைக்குத் தோற்றுகிறாரோ அதே மொழியில் விண்ணப்பங்கள் அமைதல் வேண்டும்.

(உ) குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திருக்காத, அல்லது முற்றிலும் பூர்த்திசெய்யப்படாத, அல்லது தாமதமாகக் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபால்மூலம் அனுப்பப்பட்ட விண்ணப்பம் தொலைந்துள்ளது அல்லது தாமதிக்கப்பட்டுள்ளது என்ற வகையிலான முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8. **பரீட்சார்த்தியின் அடையாளம்.**- பரீட்சார்த்தி தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும், பரீட்சை மண்டப உத்தியோகத்தர் திருப்தியடைக் கூடியவாறு பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். இது தொடர்பாக பின்வரும் ஆவணங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள் ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பரீட்சைத் திகதிக்கு 03 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டது).

*9.* **பிழையான தகவல்களை வழங்குதல்.**- எந்தவொரு பரீட்சார்த்தியும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் காணப்பட்டால் அந்தப் பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தக் கட்டத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை நிராகரிக்கப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்கள் எவையாவது தவறானவை என்பதைத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருப்பது காணப்பட்டால் அவர் சேவையிலிருந்து விலக்கப்படுவார். அரசாங்க வர்த்தமானி பகுதி I தொகுதி (IIஅ) வில் பிரசுரிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும் கடைப்பிடிக்கப்படுவது அவசியமாகும்.

*10.* **மொழி.**- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இப்பரீட்சை நடத்தப்படும்-

(அ) பரீட்சார்த்தியொருவர் தாம் விரும்பிய மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் ;

(ஆ) பரீட்சார்த்தி, சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடை எழுத வேண்டும் ;

(இ) பரீட்சையின்போது மொழி மாற்றம் அனுமதிக்கப்பட மாட்டாது.

*11.* **பரீட்சைத் திட்டம்.**- இது மூன்று பாடங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையாகும் :

பகுதி 'அ'

(i) கிரகித்தற் பயிற்சி (02 மணிநேர வினாத்தாள்) - 100 புள்ளிகள்
(ii) விவேகம் (01 மணிநேர வினாத்தாள்) - 100 புள்ளிகள்
(iii) திட்டமிடல் மற்றும் கருத்திட்ட மதிப்பீடு (02 மணிநேர வினாத்தாள்) - 100 புள்ளிகள்

பகுதி 'ஆ'

நேர்முகப் பரீட்சை.- (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).

*12.* **பாடத்திட்டம்.**- ***பாட எண் 1.***- *கிரகித்தற் பயிற்சி.*- பரீட்சார்த்திக்கு உரைப்பகுதியொன்று கொடுக்கப்படும். இதில் ஏதேனும் பகுதியொன்றுடன் தொடர்புடையதாக மாற்று விளக்கம் கொண்ட பந்திகள் தரப்பட்டிருக்கும். அவற்றுள் ஒன்று அவர் உரைப்பகுதியில் அடங்கியுள்ள விடயங்களோடு மிகவும் ஒத்ததாக இருக்கும். அதனைத் தெரிவுசெய்து காட்டுமாறு பரீட்சார்த்தி வேண்டப்படுவார். உரைப்பகுதியோடு தொடர்புடையதாக வினாத்தாள் தயாரிக்கப்படுவதானது, பரீட்சார்த்தியினால் அவ்வுரைப்பகுதியின் கருத்துக்களைக் கிரகித்துக் கொள்ளும் முறையைப் பரிசோதிப்பதற்காகும்.

***பாட எண் 2.***- *நிகழ்வு சார்ந்த ஆய்வு.*- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலையும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய திறமையையும், பரிசோதிப்பதனை நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வினாத்தாள் ஆகும். இவ்வினாத்தாளுக்கு இலங்கையின் தற்காலப் பொருளாதாரம் மற்றும் திட்ட உருவாக்கல் சம்பந்தமான தகவல்கள் சார்புடைய நூல்கள் மற்றும் வெளியீடுகளை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகள் எழக்கூடிய சந்தர்ப்பங்கள் ஒன்று அல்லது சிலவற்றை பரீட்சார்த்திக்குக் கொடுத்து, அவற்றுக்கான தீர்வுகளை வழங்குமாறு வேண்டப்படுவார்.

***பாட எண் 3.***- *திட்டமிடல் மற்றும் கருத்திட்ட மதிப்பீடு.*- திட்ட உருவாக்கற் கோட்பாடுகள் மற்றும் திட்ட உருவாக்கல் பற்றிய உபாய முறைகள் சம்பந்தமாக பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனங்காணல், தயாரித்தல், மதிப்பீடு செய்தல் பற்றிய விடயங்களில் பரீட்சார்த்திக்கு உள்ள அறிவைப் பரீட்சித்தல் இந்த வினாத்தாளின் குறிக்கோளாகும்.

*13.* **தெரிவுசெய்யும் முறை.**- (i) சகல எழுத்துமூல வினாத்தாளுக்கும் உரிய புள்ளிகளுள் ஆகக்குறைந்தது 40% ஆவது பெற்றுக்கொள்ளாத பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கத் தகுதிபெற மாட்டார்கள். நியமனம் வழங்குவதற்காகப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் மட்டும் தெரிவுசெய்யப்படுவர்.

(ii) பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் சமமானவொரு நிலையைப் பெற்றிருக்கும் சந்தர்ப்பமொன்றில் அந்த நிலை சம்பந்தமான இறுதித் தீர்வொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

*14.* இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் சம்பந்தமாக ஏதாவது பிரச்சினை எழுமாயின் அது சம்பந்தமாகவும், பரீட்சையின் ஊடாக ஆட்சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கையை இட்டும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும் என்பதுடன் அத்தீர்மானம் இறுதியானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பீ. பீ. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2007.08.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கைத் திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2007

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.)

1. (i) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
(உதாரணம் : MR./MRS./MISS. SILVA, A. L.)

(ii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2. அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-

(i)தனிப்பட்ட :----.
(ii)அலுவலகம் :----.

3. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

4. (i) பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

(ii) 2007 ஒற்றோபர் 01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

6. இனம் :
(இனத்திற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
1 - சிங்களவர்
2 - இலங்கைத் தமிழர்
3 - இந்தியத் தமிழர்
4 - முஸ்லிம்
5 - ஏனையோர்

7. (i) இரண்டாம் பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறுவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தகைமை :-

| அமை./மா. சபை/ திணை. நிறுவனத்தின் பெயர் | வகித்த பதவி | காலப்பகுதி | | வருடச் சம்பளம் |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| | | | | |

(ii) பெற்றுக்கொள்ளப்பட்ட அதியுயர் கல்வித் தகைமை :-

| பட்டம்/ டிப்ளோமாப் பரீட்சை | வருடம் | விடயங்கள் | வகுப்பு சித்தி | பல்கலைக் கழகம்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

(iii) சித்திபெற்றுள்ள அதியுயர் பரீட்சை :-

(அ) சிங்களத்தில் :----.
(ஆ) தமிழில் :----.
(இ) ஆங்கிலத்தில் :----.

8. (அ) நீர் கடனாளியாக இருந்தால், அக்கடன் எவ்வளவு ? :----.

(ஆ) நீதிமன்றமொன்றில் ஏதாவது பாகமான குற்றம் சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றீரா ? அவ்வாறாயின் விபரங்களைத் தரவும் :----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு (ஒட்டப்பட வேண்டும்) :-

இலக்கம் :----.
திகதி :----.
வழங்கப்பட்ட அலுவலகம் :----.

பற்றுச்சீட்டு ஒட்டப்படுவதற்காக

10. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவுக்கெட்டியவரையில் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதி மொழிகின்றேன். இவை பொய்யானவை அல்லது பிழையானவை என்று பரீட்சையின் முன்னர் அல்லது பின்னர் காணப்படுமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் நியமனத்தின் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

.....................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியினது கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................................................................ என்பவரை எனக்குத் தெரியும் என்பதனையும் அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் 2007 ................ .................. ஆந் திகதியன்று இட்டார் என்பதையும் உறுதிப் படுத்துகின்றேன்.

................................................,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது -
முழுப்பெயர் :----.

பதவியும் முகவரியும் :----.

திகதி :----.

12. **திணைக்கள / தாபனத் தலைவரின் சான்றிதழ்** *(அரச/ மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்காக மட்டும்) :*

விண்ணப்பதாரர் திரு./திருமதி/செல்வி ............................ .................................................... இந்தத் திணைக்களத்தில்/ மாகாண சபையில்/தாபனத்தில் கடமையாற்றுகின்றார். அவர் நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறுவதுமான/தற்காலிகப் பதவியை வகித்து வருகின்றார். கடந்த ................................ வருட காலத்தில் அவர் சகல சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளார் எனவும், அவர் (எச்சரிக்கை தவிர்ந்த) ஏனைய எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை எனவும், மேலே 08 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் இவ்வலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின் ஊடாகப் பரீட்சித்துப் பார்த்தேன் எனவும், அவை சரியானவை எனவும் இந்தப் பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால், அவர் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப் படமாட்டார் எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................................,
திணைக்கள/தாபனத் தலைவரது
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின்
கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம்/தாபனம் :----.
திகதி :----.

8-1111

திருத்தம்

### தொலைத்தொடர்புகள் மற்றும் ரேடார் தொழிநுட்பவியலாளர் பதவிக்காக இலங்கை தொழில்நுட்பச் சேவையின் II ஆம் வகுப்பின் “ஆ” பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை-2007

விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி பற்றி 20.07.2007 ஆந் திகதி வெளியாகிய இலங்கை சனநாயகக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I : தொகுதி (IIஅ) இல் என்னால் பிரசுரிக்கப்பட்ட இறுதித் திகதி 07.09.2007 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருவதுடன் பந்தி 05 இல் பின்வரும் இணைப்புகளும் சேர்க்கப்படுகின்றன.

05. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :**

05.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளுடன் ஒரே அமர்வில் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் பௌதீகவியல், தூயகணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
கொழும்பு 7,
21.08.2007.

8-1113

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.